# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 232/மா/2022**
**நாள் : 12.12.2022**

திரு. U.கருணாஷேஸ்,
சென்னை–600 029. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–8,பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, அமைந்தகரை, ராஜாராம் மேத்தா நகர், எண்.22 என்ற முகவரியில் வசிக்கும் திரு. U. கருணாஷேஸ் என்பவரின் 14.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.11.2022 அன்று பெறப்பட்டு, 232/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, அமைந்தகரை, ராஜாராம் மேத்தா நகர், எண்.22 என்ற முகவரியில் வசிக்கும் திரு. U. கருணாஷேஸ் என்பவரின் முறையீட்டு மனுவில்,

"I am the owner of the above mentioned building. In my building entrance, on the foot path, there is very huge tree and it is in falling condition. If it is fall down, definitely the public and other public properties are also caused damaged may be fatal injuries also occurred and most probably our building also will be damaged.

I have addressed a letter to the Zonal office VIII, Greater Chennai Corporation on 16.02.2022, and I have reminded them regularly to the Engineers to remove the tree. So far no actions are initiated by the Zonal officials.

Hence, I requested you sir, to kindly intervene in this matter and requested to remove the tree, in the fallen conditions, in front of my building and oblige" என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

முறையீட்டு மனுதாரர் தவிர்க்க முடியாத சில காரணங்களால் ஆஜராக இயலாத நிலையில் தன்னுடைய பிரதிநிதியாக தன்னுடைய நிறுவனத்தில் பணியாற்றும் திரு.சே.ஜே.வில்சன் சன்னி அவர்களுக்கு அதிகாரம் அளித்து, அதன்படி திரு. சே. ஜா. வில்சன் சன்னி அவர்கள் 06.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள வீட்டிற்கு வெளியே பெரிய மரம் வளர்ந்துள்ளது. சுமார் 40 வருடங்களுக்கு முந்தைய அம்மரத்தின் கிளைகள் பரந்து விரிந்து காணப்படுகின்றன. பருமனான கிளைகளைக் கொண்ட மேற்கண்ட மரம் சாலையில் விழுவது போன்று மிகவும் சாய்ந்து காணப்படுகிறது. மேற்கண்ட மரம் சாயும் நிலையில் உள்ளதாலும், அபாயத்தை தவிர்த்திடும் பொருட்டும், அதனை அகற்றிட மாநகராட்சி உதவி ஆணையருக்கு புகார்கள் அனுப்பப்பட்டன. மேலும் சென்னை மாநகராட்சி பூங்கா மேற்பார்வையாளருக்கு புகார் மனுக்கள் அனுப்பப்பட்டன. ஆனால், மேற்கண்ட புகார் மனுக்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட மரத்தை ஆய்வு செய்து, அதனை அகற்றிடவோ அல்லது அம்மரத்தின் கிளைகளை அகற்றிடவோ ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் பூங்கா பணி மேற்பார்வையாளர் 06.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்,**

"மனுதாரர் தெரிவித்துள்ள சென்னை, அமைந்தகரை ராஜாராம் மேத்தா நகர், எண் 27 என்கின்ற கட்டடம் அமைந்துள்ள சாலைக்கு வெளியே உள்ள மரத்தை என்னால் ஆய்வு செய்யப்பட்டது. மரத்தின் கிளைகள் பெரிய அளவில் வளர்ந்துள்ளன. மேலும், அம்மரம் சாலையையொட்டி சற்று சாய்ந்தும் உள்ளது. எனவே, மனுதாரரின் புகாரையொட்டி அம்மரத்தின் கிளைகளை மண்டல அலுவலரின் அனுமதி பெற்று ஒரு வாரத்தில் அகற்றப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா பணி மேற்பார்வையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரரின் மனு, அவர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்கள் மற்றும் வாக்குமூலத்தின் மூலம் மனுதாரரின் வீட்டின் முன்புறம் உள்ள சாலையோரத்தில் குறிப்பிட்டுள்ள மரம் ஓங்கி வளர்ந்து அதிகமான கிளைகளுடனும், சாலையோரம் சற்று சாய்ந்து இருப்பதை அறியமுடிகிறது. மண்டலம்-8ன் கள பணியாளர்கள் அவ்வப்போது அதாவது இரு மாதத்திற்கு ஒரு முறையேனும் தங்கள் மண்டலப் பகுதியில் இவ்வாறான மரங்களை ஆய்வு செய்து உடனுக்குடன் மரக்கிளைகளை அகற்ற நடவடிக்கை எடுத்து இருந்தால், இம்மாதிரியான புகார் மனுக்களை தவிர்க்கலாம் என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அவ்வாறு செய்யும்பட்சத்தில் மழைக்காலங்களில் இவ்வாறான ஆபத்தான மரங்களால் ஏற்படும் பின்விளைவுகளை தவிர்க்கலாம்.

எனவே, மண்டலம் -8ன் கள அலுவலர்கள் தங்கள் பகுதியில் உள்ள இவ்வாறான மரங்களில் உள்ள பெரிய கிளைகளை அவ்வப்போது ஆய்வு செய்து அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கவும், பூங்கா பணி மேற்பார்வையாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட மரத்தின் கிளைகளை

மண்டல அலுவலரின் அனுமதி பெற்று ஒரு வாரத்தில் அகற்றவும், மேலும் மண்டலம்-8ன் பிற பகுதிகளில் இவ்வாறான ஆபத்தான மரங்களை களப் பணியாளர்களை கொண்டு கண்டறிந்து, அவ்வாறான மரங்களின் கிளைகளை அகற்றிடவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-8ன் அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுறுத்தியும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்கமாறும் இம்முறை மன்றம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. U. கருணாஷேஸ்,
   எண்.22, இராஜாராம் மேத்தா நகர்,
   அமைந்தகரை, சென்னை – 600 029.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (பணிகள்)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   } *He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர்,
   மண்டலம்–8,பெருநகர சென்னை மாநகராட்சி,
   புதிய எண்.36B, புல்லா அவென்யூ,
   ஷெனாய் நகர், சென்னை – 600 030.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

13/12/22

செயலாளர்.

13.12.22

1/10